**செ.வெ.எண்.54** **நாள்.27.06.2024**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் குடும்பம் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தேவைப்படும் அவசரகால மீட்பு, மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, காவல் உதவி, சட்ட உதவி, தற்காலிக தங்குமிடம் உணவு ஆகியவற்றை வழங்கி அவர்களை பாதுகாக்க சமூக நலத்துறையின் கீழ் "சகி"- ஒருங்கிணைந்த சேவை மையம் (OSC) செயல்படுகின்றது. அதில் பணிபுரிய கீழ்கண்ட நிலைகளில் ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் கீழ்கண்ட அலுவலகத்தில் தங்கள் சுயவிவரங்களுடன் 12.07.2024 மாலை 5.45-ற்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

**1. பதவி** - வழக்குப்பணியாளர் - (Case Worker )

**பணியிடம்** -1, **கல்வித்தகுதி** -BSW & MSW (Counselling Psychology or Development Management, **வயது வரம்பு** -21 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். **தகுதி** -1 வருடத்திற்கு மேலாக குடும்ப நல ஆலோசனையில் முன் அனுபவம் பெற்ற பெண் பணியாளராக 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணி அமர்த்தப்படும். உள்ளுரை சார்ந்தவராக இருத்தல் வேண்டும். **தொகுப்பு ஊதியம் ரூ.18,000/-**

**2.பதவி** - பாதுகாவலர் (Security Guard )

**பணியிடம்** -1
**கல்வித்தகுதி** - 8 வது தேர்ச்சி (அ) 10வது தேர்ச்சி/ தோல்வி, **வயது வரம்பு** -21 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். **தகுதி** -நிர்வாக அமைப்பின் கீழ் பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும். 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணி அமர்த்தப்படும். உள்ளுரை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

பெண்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
இருசக்கர வாகனம் ஓட்ட தெரிந்தவராக இருக்க வேண்டும்
**தொகுப்பு ஊதியம் ரூ.12,000/-**

**விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்ப படிவத்தினை அரியலூர் மாவட்ட இணையதளத்தில்** https://ariyalur.nic.in **பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும்.**

**நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:**

**"சகி" ஒருங்கிணைந்த சேவை மையம்,**
அரியலூர் அரசு மருத்துவமனை வளாகம்,
அரியலூர் சித்தா மருத்துவம் எதிரில்,
அரியலூர்-621704.

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்**